முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (12.7.2024) அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டம் – அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்ட பகுதிப் பிரதிநிதி கணபதியின் மகள் பவித்ரா – அஜித்குமார் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (12.7.2024) அவரது இல்லத்தில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி – அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது பேரன் டாக்டர் எஸ்.நாச்சியப்பன் ரகுபதி – டாக்டர் பி.அழகம்மை ஆகிய புதுமண இணையருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.7.2024) சென்னையில் நடைபெற்ற எம்.எஸ். ஜாபர் சேட், இ.கா.ப., (ஓய்வு) அவர்களின் மகள் ஹஸ்னா – சிரிஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

செஸ் விளையாட்டில் மிக இளம் வயதிலேயே #FIDE 'Women Candidate Master' பட்டத்தை வென்ற அரியலூர் மாவட்டம் உடையார் பாளையத்தைச் சேர்ந்த சர்வாணிகா இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது உலகளாவிய போட்டிகளில் தடம் பதித்து தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் சர்வாணிகா தொடர்ந்து பெருமை சேர்த்து வெற்றிப் பயணம் தொடர வாழ்த்தினார்.

மேற்கு வங்க அரசு தாக்கல் செய்த வழக்கு! மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல்

சி.பி.அய். விசாரணை மாநில உரிமை பறிப்பே!

உச்சநீதிமன்ற அமர்வின் கருத்து சரியானதே, வரவேற்று கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 13-

மேற்கு வங்க மாநில அரசு தாக்கல் செய்த ஒரு வழக்கில், மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல், ஒரு மாநிலத்தில் சி.பி.அய். விசாரணை நடத்த ஒன்றிய அரசு முயலுவது - கூட்டாட்சித் தத்துவத்திற்கும், மாநில உரிமைக்கும் எதிரானது என்று - உச்சநீதிமன்ற அமர்வு தெரிவித்த கருத்தை வரவேற்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

உச்சநீதிமன்றத்தில் மேற்கு வங்க அரசு தாக்கல் செய்த ஒரு வழக்கு நீதிபதிகள் ஜஸ்டிஸ் பி.ஆர்.கவாய், ஜஸ்டிஸ் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வின்முன் 10.7.2024 அன்று விசாரணைக்கு வந்தது.

மேற்கு வங்க அரசு தாக்கல் செய்த வழக்கில் - சி.பி.அய். என்ற அமைப்புதான் மேற்கு வங்கத்தில் வழக்கு விசாரணையைத் தொடங்கி நடத்தவேண்டும் என்று முனைப்புடன் செயல்படும் ஒன்றிய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக, சி.பி.அய். என்ற அமைப்பு முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் ஒன்று என்றும் - ஏற்கெனவே மாநில அரசின் அனுமதியின்றி ஒரு மாநிலத்தில் அவர்கள் விசாரணை நடத்த முனைய அதிகாரம் இல்லை; மாநிலத்தில் விசாரணை நடத்த அந்த மாநிலத்தின் ஒப்புதல் இன்றியமையாதது - என்று மாநில அரசு வாதிட்டது. காலங்காலமாய் நிலவி வந்த அரசமைப்புச் சட்டப்படிக்கான மாநில உரிமைகளைப் பறிப்பதாகும் என்பதே இந்த வழக்கின் மய்யக் கருத்தாகும்!

கூட்டாட்சித் தத்துவத்துக்கு முரணானது!

இது இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கூட்டாட்சி தத்துவத்திற்கு முற்றிலும் முரணானது என்பதே முக்கியம் - குறிப்பிட்ட வழக்கில்கூட!

இதுபற்றி விசாரணை நடத்திய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வில், மூத்த நீதிபதி பி.ஆர்.கவாய் அவர்கள் தெளிவாக சில முக்கிய சட்ட விளக்கங்களை எடுத்து ரைத்துள்ளார்.

1. சி.பி.அய். என்பது மேற்கு வங்கம் கூறுவது போல், ஒன்றிய அரசின்கீழ் இயங்கும் ஒரு தனி அமைப்பு - அது தன்னிச்சையாக, சுதந்திரத்துடன் செயல்படாத வகையில் ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட அதன்கீழ் இயங்கும் ஓர் அமைப்பே என்று கூறியுள்ளார்!

2. சி.பி.அய். என்பது ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்பட்டு, கண்காணிப்பு, மேற்பார்வை எல்லாம் உள்பட இயங்கும் ஓர் அமைப்பு தானே தவிர, வேறில்லை.

எதற்கெடுத்தாலும் 'சி.பி.அய். கூப்பாடா?'

3. மாநில அரசுகள் ஒப்புதலுக்குப் பிறகே மாநில வழக்குகளை அது விசாரணைக்கு உட்படுத்த முடியும் என்பது (DS PE CACL) படியே உள்ள மாநில உரிமையாகும். எனவே, மாநில அரசின் முன் அனுமதி பெறாமல், அது தனது விசாரணையைத் தொடங்க முடியாது என்பது கோடிட்டுக் காட்டப்படவேண்டிய சட்ட நிலையாகும்.

காரணம், இது மாநிலங்களின் உரிமை என்ற கூட்டாட்சிபற்றிய அரசமைப்புச் சட்ட அவைகளுக்கு கிடைத்துள்ள உரிமைகள் பாதுகாப்பு ஆகும்!

- இந்த காலகட்டத்தில் உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதியின் கருத்து ஒரு முக்கிய - கண்மூடியபடி கருத்துக் கூறுவோருக்குத் தக்க பாடமாக உள்ளது!

இப்போது அரசியலில் ஒரு வேடிக்கை - எதற்கெடுத்தாலும், எங்கே எது நடந்தாலும், அந்த மாநில காவல் துறை, புலன் விசாரணை அமைப்புகள் ஏதோ செயல்திறனற்ற ஓர் அமைப்பு போன்று விமர்சிப்பது - அது எதிர்க்கட்சிகளுக்கும் மற்ற சில கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் அரசியல் பசி தீர்க்கும் தீனியாகப் பயன்பட்டாலும், கொள்கை ரீதியாக அது எப்படி மோசமான ஒரு கோரிக்கை என்பதை ஆழமாக சிந்திக்கும் எவருக்கும் தெளிவாக விளங்கும்.

1. இதன்மூலம் மாநில காவல்துறையின் திறமையைக் கொச்சைப்படுத்தி, கீழமைக்குக் கொண்டு செல்லும் அவலம் ஏற்படுகிறது!

(எங்கோ சில சில இடங்களில் அதிகாரத் தவறுகள் நடைபெற்றிருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த மாநில காவல்துறையையே களங்கப்படுத்திடலாமா? அரும்பாடுபட்டு, தங்கள் உயிரைப் பணயம் வைத்து, இரவு - பகல் பார்க்காமல் கடமையாற்றும் காவல்துறை அதிகாரிகளை, காவல்துறையை இது கறைபடியச் செய்யாதா?

மாநிலப் பணியிலிருந்து சென்றவர்கள்தானே சி.பி.அய். அதிகாரிகள்?

2. சி.பி.அய். அதிகாரிகள் என்ன தனியாகவா நியமனம் பெற்று வருகிறார்கள்? மாநிலக் காவல்துறையிலிருந்து தானே அங்கே செல்லுகிறார்கள்; பிறகு திரும்ப மறுபடியும் மாநிலப் பணிக்கே திரும்புகிறார்கள். பின், ஏன் இந்த அவசரக் கோல அள்ளித் தெளிப்பு?

மேனாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே பகிரங்கமாக ஒன்றைக் கேட்டார்.

"சி.பி.அய். அதிகாரிகள் என்ன வானத்திலிருந்து பொத்தென்று குதித்தவர்களா?" என்று!

இப்படிக் கூறுவது சற்றுக் கடுமையான சொற்களாக இருந்தாலும், அதன் அடிப்படைக் கருத்தை மறுக்க முடியுமா?

அவரது சொற்கள் வேண்டுமானால் ஏற்க முடியாததாக இருக்கலாம்; உண்மை அது தானே! மாநில காவல்துறையிலிருந்துதானே தேர்வு செய்யப்பட்டுச் செல்கிறார்கள். அங்கேயே என்ன நடந்தது என்பது சில ஆண்டுகளுக்குப் பின் மோடி அரசில் விவாதிக்கப்படவில்லையா?

அதைத்தான் மேலே நாம் சொன்னோம்.

அதையெல்லாம்விட, தற்கால சந்தர்ப்பவாத (Expediency) - இப்படி கோரிக்கை வைக்கும் எதிர்க்கட்சிகளின் முந்தைய சரித்திரம் - கூற்று மறந்து போகுமா?

ஆளும் கட்சியாகிவிட்டால் இந்தக் கோரிக்கையை வைப்பார்களா?

நாளைக்கு மாநில அரசு எதிர்க்கட்சிகளை இவ்வாறு நடத்திடும் நிலை வந்தால், இதே நிலைப்பாட்டுக்கு எதிர்நிலை எடுக்காமல் இருப்பார்களா?

பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேசத்தில் 121 பேரின் உயிரைப் பலி வாங்கிய ஒரு சாமியார் வழக்கில் சி.பி.அய். விசாரணையை அரைவேக்காடு அண்ணாமலை கோருவாரா?

பல வழக்குகளில், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சி.பி.அய். விசாரணையை ஏற்காத கட்டங்களும், நிகழ்வுகளும் மறந்து விட்டதா?

பல மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பெரிய சிக்கல் நிறைந்த வழக்குகளுக்கு அதைக் கோரினால், அதில் பொருள் உண்டு. எடுத்ததெற்கெல்லாம் சி.பி.அய். விசாரணை என்று கோரினால், கீறல் விழுந்த கிராமஃபோன் தட்டுக் குரல் போல் தேவையா?

மாநில உரிமை முக்கியம் அல்லவா!

மாநில உரிமைகளைப் பெருக்கி, விரிக்க வற்புறுத்தும் பல தலைவர்களே கூட, "சி.பி.அய். விசாரணை தேவை" என்று அடிக்கடி கூறுவது ஏற்கத்தக்கதல்ல - அரசமைப்புச் சட்டப்படி சுய முரண்பாடும் ஆகும்!

தற்காலிக லாபத்தை எண்ணி, நிரந்தர முதலீடு காலியாவதற்கு துணை போகவேண்டாம் என்பதே நமது கருத்து!

Expediency என்ற சந்தர்ப்பவாதமாகவே முடியும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில்

மனுநீதி சோழன் போல் சிறப்பான ஆட்சி செய்து வருகிறார் முதல்வர்!

கள்ளக்குறிச்சி 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!

கள்ளக்குறிச்சி, ஜூலை 13

தமிழகத்தில் மனுநீதி சோழன் போல் சிறப்பான ஆட்சி செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர் என மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதத்துடன் கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வாணாபுரத்தில் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை பொதுப்பணி நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தலைமையில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர்கள் முன்னிலையில் இம்முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழகத்தில் மனுநீதி சோழன் போல் மிகச் சிறப்பான முறையில் ஆட்சி செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியாவில் ஆட்சி புரியும் முதல்வர்கெல்லாம் முதல்வராக சிறந்த முதல்வராக நமது முதல்வர் திகழ்ந்து வருகிறார் மேலும் 24 மணி நேரமும் பொது மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் வசதிகளையும் நிதிகளையும் உடனடியாக கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அயராமல் உழைத்துக் கொண்டு வருகிறார்.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊமராட்சிகளிலும் உள்ள பொதுமக்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற வேண்டும் என் பதற்காகத் தான் முதலமைச்சர் நேற்று முன்தினம் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக வாணாபுரம் ஊராட்சி யில் ஊரகப் பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் நேற்று முன் தினம் முதல் தொடங்கி வருகிற 12.9.2024 வரை 70 முகாம்கள் நடைபெற உள்ளது, இம்முகாம்களை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். இத்திட்டத்தின் கீழ், பெறப்படும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான பொது மக்களின் மனுக்களை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விரைவாக பரிசீலனை செய்து, மனுக்களுக்கு தீர்வு காண உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சத்தியநாராயணன், ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், துரை முருகன், பாரதிதாசன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் புவனேஷ்வரி பெருமாள், ரிஷிவந்தியம் ஒன்றியக் குழுத்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் மு.தங்கம், ஒன்றிய குழு துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, ரிஷிவந்தியம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், சந்திரசேகரன், வாணாபுரம் வருவாய் வட்டாட்சியர் குமரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் கோவிந்தராஜன், அமிர்தம், ராஜேந்திரன், வாணாபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் மணிகண்டன், ஊராட்சி மன்றத் தலைவர் தீபா அய்யனார், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

2024-2025-ஆம் ஆண்டின் புதிய அறிவிப்புகள் குறித்து

சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழும அதிகாரிகளுடன் ஆலோசனை!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு மேற்கொண்டார்!

சென்னை, ஜூலை 13

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (12.7.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் 2024-2025ஆம் ஆண்டின் புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மானியக் கோரிக்கையின் போது 2024—2025-ஆம் ஆண்டில் அறிவித்த புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், சென்னை பெருநகர் பகுதியில் 10 பொது நூலகங்கள் மின்வழி கற்றல் மற்றும் பகிர்ந்த பணியிட (Coworking Space) மையங்களாக மேம்படுத்துவது குறித்து பொது நூலக இயக்கக அலுவலர்களுடனும், சென்னைப் பெருநகர் பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய போக்குவரத்து சமிக்ஞைகள் (Traffic Signals) சூரிய சக்தியில் இயங்கும் வகையில் அமைப்பது குறித்து பெருநகர சென்னை காவல் துறை அலுவலர்களுடனும், நெடுஞ்சாலை துறை அலுவலர்களுடனும் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர். லலிதா, பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) ர.சுதாகர், இணை இயக்குநர் (பொது நூலக இயக்ககம்) இளங்கோ சந்திரகுமார், மாநகர போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (இயக்கம்) ஜி.செல்வன், மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் (ம) உடமை) ஜி.சரவணமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) டி.சிற்றரசு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முகவர்களுடன் ஆலோசனைக்கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். வேட்பாளர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்து கொண்டனர்.